**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு.எம்.தனபால், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2024–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.1026/2022**

**(பழனி முதன்மை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.480/2019)**

**(CNR No.TNDG19-003634-2022)**

**----**

1. சவடப்பன் (எ) சவடமுத்து

2. நாகராஜன்

3. செல்வராஜ்

4. சுப்புலட்சுமி ...... வாதிகள்

*/ எதிர் /*

1. கிருஷ்ணவேல்

2. பெருமாளம்மாள்

3. சித்திராங்கியம்மாள் ...... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது அசல் வழக்கு எண்.480/2019 ஆக கடந்த 30.10.2019 ஆம் தேதி பழனி சார்பு நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று பின்பு ஆள் எல்கை வரையறையின் காரணமாக மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் அவர்களின் அ.எண்.137/21/ஏ1. தேதி: 15.12.2021 உத்தரவின்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.1026/2022 ஆக 16.02.2022–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சௌந்திரராஜன், அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 3 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால்

தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டு ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், இவ்வழக்கின் 2–ம் பிரதிவாதிக்கு படிமெமோ செலுத்தாத காரணத்தினால் 2–ம் பிரதிவாதியை இவ்வழக்கில் இருந்து தள்ளுபடி செய்தும், வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

## தீர்ப்புரை

தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய 2/6 பங்கு பாக சொத்துக்களை நயமிடர் பார்த்து பிரித்து தனித்து சுவாதீனம் வாதிகளுக்கு கிடைக்கும் வகையில் முதல் நிலை தீர்ப்பாணை வழங்க கோரியும், அவ்வாறு பிரதிவாதிகள் வாதிகளுக்குரிய 2/6 பங்கை பிரித்து கொடுக்க மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றம் மூலம் ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அளந்து அத்துக்கண்டு வாதிகளுக்குரிய பங்கை பிரித்து தரும்படி இறுதி நிலை தீர்ப்பானை வழங்கும் படிக்கும் தாவா சொத்துக்களை பொறுத்து 1, 3 பிரதிவாதிகள் அவர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணமானது தாவா சொத்துக்களில் வாதிகளுக்குள்ள பங்கு பாத்தியத்தை பொறுத்து சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வேண்டியும், 3–ம் பிரதிவாதி வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களையும் சேர்த்து எந்தவித பந்தக பராதீனங்களும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவு தொகை கோரியும் வாதிகளால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம். :–**

தாவா சொத்துக்கள் தொடதிம்மையகவுடர் மற்றும் மகன் கிருஷ்ணசாமி அவர்களால் கிரையம் பெறப்பட்டு, அவர்களது மக்களான கிருஷ்ணசாமி மற்றும் அழகர்சாமி ஆகியோர்களுடன் அனுபவித்து வந்ததில் தொடதிம்மைய கவுடர் காலத்திற்கு பின்பு, அவரின் மக்கள் அனுபவித்து வந்ததில், மூத்த மகன்

கிருஷ்ணசாமிக்கு மனைவி மாரியாயி மூலம் குப்பணகவுடர் ஒரே மகன் ஆவார் என்றும், குப்பணகவுடருக்கு மனைவி நாகம்மாள் மூலம் வீருநாகம்மாள், சுப்புலட்சுமி, கிருஷ்ணவேல் ஆகியோர்கள் மக்கள் ஆவார்கள் என்றும், வீரநாகம்மாள் இறந்துவிட்டதால், மேற்படியாரின் கணவர் மற்றும் மகன்கள் தான் 1 முதல் 3 வாதிகள். கிருஷ்ணசாமியின் சகோதரரான அழகர்சாமிக்கு மனைவி சுப்பக்காள் மூலம் திருமலைச்சாமி என்ற ஒரே மகன். திருமலைசாமியின் மனைவி தான் 2–ம் பிரதிவாதி பெருமாளம்மாள், மேற்படியாரின் மகள் தான் 3–ம் பிரதிவாதி சித்திராங்கியம்மாள். தொடதிம்மையகவுடரின் மக்களான கிருஷ்ணசாமி மேற்படியாரின் மனைவி மற்றும் மேற்படியாரின் மகன் குப்பணகவுடர், அவரது மனைவி நாகம்மாள் ஆகியோர்கள் காலமாகவிட்டார்கள் என்றும், மேற்படியார்களின் மகளான 1–ம் வாதியின் மனைவியும், 2, 3 வாதிகளின் தாயாரான வீரநாகம்மாளும் இறந்துவிட்டார் என்றும், மேற்படியார்களின் வாரிசுதாரர் என்ற முறையில் சொத்துக்களை பொதுவாக வைத்து, அனுபவித்து வரப்படுகிறது. வாதிகளுக்காக சொத்துக்களை 1–ம் பிரதிவாதியே அனுபவித்து வந்து, இது காலம் வரை வாதிகளுக்குரிய பங்கு பாத்தியத்தை முறையாக கொடுத்து வந்துள்ளார் என்றும், தொடதிம்மையகவுடரின் மற்றொரு மகனான அழகர்சாமி, அவரது மனைவி சுப்பாக்காள் மகன் திருமலைசாமி ஆகியோர்கள் வெகுகாலத்திற்கு முன்பே இறந்துவிட்டதில், அழகர்சாமியின் மனைவியான 2ம் பிரதிவாதி கணவர் இறந்த பின்பு ஊரை விட்டு வெளியேறி, வேறு ஒரு நபருடன் தற்போது வெளியூரில் வாழ்ந்து வருகிறார் என்றும், மேற்படியாரின் பகுதி பாத்தியச் சொத்தை, மேற்படியாரின் மகளான 3ம் பிரதிவாதி ஒரு பகுதி சொத்துக்களை உழவடை செய்து அனுபவித்து வருகிறார் என்றும், தாவா சொத்துக்களுக்கு அருகில் பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு சொந்தமான நிலமான சர்வே எண்.554/1–இல் ஏக்கர் 3.28 செண்ட் நிலத்தையும் சேர்த்து தாவா சொத்துக்களுடன் 1–ம் பிரதிவாதியும், 3–ம் பிரதிவாதியும் ஆளுக்கு ஒரு பகுதியாக உழவடை செய்து, அனுபவித்து வருகிறார்கள் என்றும், வாதிகள் தாவா சொத்துக்களில் அவர்களுக்குரிய பங்கு பாத்தியத்தை முறையாக பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் என்று 1, 3 பிரதிவாதிகளிடம் கேட்டதில்,

தாவா சொத்துக்களை 1, 3 பிரதிவாதிகள் ஏற்கனவே பாகம் பிரித்துக் கொண்டதாகவும், வாதிகளுக்கு சொத்துக்களில் பாத்தியம் இல்லை என்று 1, 3 பிரதிவாதிகள் தெரிவித்தனர் என்றும், இது காலம் வரை வாதிகளுக்குரிய பங்கு பாத்தியத்தை செலுத்தி வந்த 1–ம் பிரதிவாதி தற்போது 3–ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு, சொத்துக்களை முழுவதுமாக அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு வருவது தெரிய வந்த வாதிகள், தாவா சொத்துக்கள் குறித்து வில்லங்கம் பெற்று பார்த்ததில், 1 ம் பிரதிவாதியும், 3 ம் பிரதிவாதியும் சேர்ந்து தன்னிச்சையாக கடந்த 16.06.1993 இல் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளது தற்போது தெரிய வந்தது என்றும், மேற்படி ஆவணத்தை நகல் போட்டுப் பார்த்ததில் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து, பொதுக்குடும்ப உறுப்பினர்களாக வாதிகள் இல்லாமலும், 3–ம் பிரதிவாதியின் தாயாரான 2–ம் பிரதிவாதி இல்லாமல் பொதுக்குடும்ப உறுப்பினர்களின் நலனுக்கு விரோதமாக தங்களுக்குள் தன்னிச்சையாக ஒரு பாகப்பிரிவினை ஆவணத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளது தெரிய வந்தது என்றும், பாகப்பிரிவினை ஆவணத்தில் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான சர்வே எண்.564/1 இல் உள்ள ஏக்கர் 3.28 செண்ட் நிலத்தை 1–ம் பிரதிவாதியின் பாகத்திற்கும், தாவா சொத்துக்கள் முழுவதையும் 3–ம் பிரதிவாதியின் பாகத்திற்கு பாத்தியப்பட்டதாக கண்டு, எழுதப்பட்டுள்ளது என்றும், 1, 3 பிரதிவாதியின் தகப்பனார் இறந்த பின்பு தான் 2–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து பாத்தியம் ஏற்படும் என்றும், 2–ம் பிரதிவாதி இறந்த பின்பு தான், தாவா சொத்தின் பாத்தியம் 3–ம் பிரதிவாதிக்கு ஏற்படும் என்றும், எனவே 1, 3 பிரதிவாதிகள் வாதிகளின் பாக உரிமையை மோசடி செய்ய ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை சட்டப்படி செல்லதக்கதல்ல என்றும், வாதிகள் 15.10.2019–ம் தேதி பொது மனிதர்களை வைத்து 1, 3 பிரதிவாதிகளிடம் பாகப்பிரிவினை கோரி பைசல் செய்ததில், 1, 3 பிரதிவாதிகள் வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் பாத்தியம் இல்லை என்று தெரிவித்து பாகப்பிரிவினை செய்து கொடுக்க மறுத்துவிட்டனர் என்றும், எனவே தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய பாகத்தை பிரிந்து தனிச்சுவாதீனத்திற்கு உத்திரவிடக்

கோரியும், விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகாளல் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு, 3–பிரதிவாதி மட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் பிரதிவாதிகள் இந்த வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

**4)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்? இவ்வழக்கில் வாதிகள் கோரியவாறு 2/6 பங்கு பாகமும், விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**5)** இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 1–ம் வாதி சவடப்பன் (எ) சவடமுத்து என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிடப்படவில்லை.

**6. பிரச்சனைக்கான தீர்வு :–**

வாதிகள் தரப்பில் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலித்து பார்க்கப்பட்டது. தாவா சொத்துக்கள் தொடதிம்மையகவுடர் மற்றும் மகன் கிருஷ்ணசாமி அவர்களால் கிரையம் பெறப்பட்டு, மேற்படியார்களின் மக்களான கிருஷ்ணசாமி மற்றும் அழகர்சாமி ஆகியோர்களுடன் அனுபவித்து வந்ததில், தொடதிம்மையகவுடர் காலத்திற்கு பின்பு, அவரின் மக்கள் அனுபவித்து வந்ததில் மூத்த மகன் கிருஷ்ணசாமிக்கு மனைவி மாரியாயி மூலம் குப்பணகவுடர் ஒரே மகன் ஆவார் என்றும், குப்பணகவுடருக்கு மனைவி நாகம்மாள் மூலம் வீருநாகம்மாள், சுப்புலட்சுமி, கிருஷ்ணவேல் ஆகியோர்கள் மக்கள் என்றும், வீரநாகம்மாள் இறந்துவிட்டதால், அவரின் வாரிசுகளான

கணவர் மற்றும் மகன்கள் தான் 1 முதல் 3 வாதிகள் என்றும், கிருஷ்ணசாமியின் சகோதரரான அழகர்சாமிக்கு மனைவி சுப்பக்காள் மூலம் திருமலைச்சாமி என்ற ஒரே மகன் என்றும், திருமலைசாமியின் மனைவி தான் 2–ம் பிரதிவாதி பெருமாளம்மாள், மேற்படியாரின் மகள் தான் 3–ம் பிரதிவாதி சித்திராங்கியம்மாள், நாகம்மாள் கடந்த 12.07.2019–ம் தேதியும், அவரது மகள் வீரநாகம்மாள் கடந்த 18.11.1993–ம் தேதியும் இறந்து போய்விட்டார்கள் என்றும், தொடதிம்மையகவுடரின் மக்களான கிருஷ்ணசாமி, மேற்படியாரின் மனைவி மற்றும் மேற்படியாரின் மகளான 1–ம் வாதியின் மனைவியும், 2, 3 வாதிகளின் தாயாரான வீரநாகம்மாளும் இறந்துவிட்டார் என்றும், 1 முதல் 3 வாதிகள் வாரிசுதாரர்கள் என்ற முறையில் சொத்துக்களை பொதுவாக வைத்து, அனுபவித்து வரப்படுகிறது என்றும், வாதிகளுக்காக சொத்துக்களை 1–ம் பிரதிவாதியே அனுபவித்து இன்று வரை வாதிகளுக்குரிய பங்கு பாத்தியத்தை முறையாக கொடுத்து வந்துள்ளார் என்றும், தொடதிம்மையகவுடரின் மற்றொரு மகனான அழகர்சாமி, அவரது மனைவி சுப்பக்கான் மகன் திருமலைசாமி ஆகியோர்கள் வெகுகாலத்திற்கு முன்பே இறந்துவிட்டதால் அழகர்சாமியின் மனைவியான 2ம் பிரதிவாதி கணவர் இறந்த பின்பு ஊரை விட்டு வெளியேறி, வேறு ஒரு நபருடன் தற்போது வெளியூரில் வாழ்ந்து வருகிறார் என்றும், 3ம் பிரதிவாதி ஒரு பகுதி சொத்துக்களை உழவடை செய்து அனுபவித்து வருகிறார் என்றும், தாவா சொத்துக்களுக்கு அருகில் பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு சொந்தமான நிலமான சர்வே எண்.554/1–இல் ஏக்கர் 3.28 செண்ட் நிலத்தையும் சேர்த்து தாவா சொத்துக்களுடன் 1–ம் பிரதிவாதியும், 3–ம் பிரதிவாதியும் ஆளுக்கு ஒரு பகுதியாக உழவடை செய்து, அனுபவித்து வருகிறார்கள் என்றும், வாதிகள் தாவா சொத்துக்களில் அவர்களுக்குரிய பங்கு பாத்தியத்தை முறையாக பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் என்று 1, 3 பிரதிவாதிகளிடம் கேட்டபோது தாவா சொத்துக்களை 1, 3 பிரதிவாதிகள் ஏற்கனவே பாகம்

பிரித்துக் கொண்டதாகவும், வாதிகளுக்கு சொத்துக்களில் பாத்தியம் இல்லை என்று கூறி மறுத்ததாகவும், 1, 3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து செய்து கொண்ட பாகப்பிரிவினை தற்போது தான் தெரிய வந்ததாகவும், மேற்படி பாகப்பிரிவினை வாதிகளின் பாக உரிமைகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும், எனவே மேற்படி பாகப்பிரிவினை சட்டப்படி செல்லதக்கதல்ல என்றும், பிரதிவாதிகள் மோசடியாக எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றும், வாதிகள் 1, 3 பிரதிவாதிகளிடம் தாவா சொத்துக்களை பொறுத்து பொது மனிதர்களை வைத்து பாகப்பிரிவினை கோரியும், பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய பாகத்தை பிரித்து கொடுக்க மறுத்து வந்தனர் என்று தெரிவித்து வழக்குரையை ஒத்து சாட்சியமளித்துள்ளனர்.

7. இந்நிலையில் வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கையில் வா.சா.ஆ.1 கொடிவழி ஜாபிதா என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 10.11.2016–ம் தேதி திண்டுக்கல் உதவி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 20.10.2019–ம் தேதிய 1 முதல் 3 இலக்க சொத்திற்கான பட்டா என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 20.10.2019–ம் தேதிய 4 இலக்க சொத்திற்கான கூட்டுப்பட்டா என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 01.08.2019–ம் தேதிய நாகம்மாளின் இறப்பு சான்றிதழ் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 16.06.1993–ம் தேதிய 1, 3 பிரதிவாதிகள் அவர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகல் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 25.06.1921–ம் தேதிய தொடதிம்மையகவுண்டர் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 21.07.2004–ம் தேதிய தொடதிம்மையகவுண்டர் கிரையம் பெற்ற கிரைய

ஆவணத்தின் சான்றிட்ட நகல் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே மேற்கண்ட பரிசீலனையில் இருந்து தாவா சொத்துக்கள் தொடதிம்மையகவுடர் மற்றும் அவரது மகன் கிருஷ்ணசாமி ஆகியோர்களுக்கு கிரையத்தில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் தொடதிம்மையகவுடரின் இறப்பிற்கு பின்பு அவரது மக்கள் கிருஷ்ணசாமி மற்றும் அழகர்சாமி ஆகியோர்கள் தாவா சொத்துக்களை பொதுவாக வைத்து அனுபவித்து வந்தார்கள் என்றும் வாதியின் அப்பா குப்பணகவுடர் மற்றும் அவரது அம்மா நாகம்மாள் இறப்பிற்கு பின்பு வாதிகளும் பிரதிவாதிகளும் தாவா சொத்தை பொதுக்குடும்ப சொத்தாக வைத்து அனுபவித்து வந்தார்கள் என்றும் தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/6 பங்கு பாக உரிமை உள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**8.** வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவிலும், வா.சா.1–இன் சாட்சியத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ளும் வகையில் இருப்பதாலும், இதை மறுக்கும் விதத்தில் பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் தாவாவை மறுக்கும் வண்ணம் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தாததாலும், வாதியின் தாவாவை ஏற்றுக் கொள்ளும் வகையிலேயே அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதி இவ்வாறு மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**9.** இறுதியில், இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

1. தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய **2/6** பங்கு பாகத்தை பிரதிவாதிகள் இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் வாதிகளுக்கு தனித்த சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று முதல் நிலை தீர்ப்பாணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

2. அவ்வாறு பிரதிவாதிகள் வாதிகளுக்குரிய 2/6 பங்கு பாகத்தை பிரித்து கொடுக்க மறுக்கும்பட்சத்தில் வாதிகள் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனு தாக்கல் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**3.** 1, 3 பிரதிவாதிகள் அவர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணமானது தாவா சொத்துக்களில் வாதிகளுக்குள்ள பங்கு பாத்தியத்தை பொறுத்து சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**4.** தாவா சொத்தில் 3–ம் பிரதிவாதி 3–ம் நபர்களின் பெயர்களுக்கு யாதொரு ஒத்தி, ஈடு, குத்தகை, கிரையம் போன்ற வில்லங்களுக்கு உட்படுத்தக்கூடாதென 3–ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

5. தரப்பினர்களின் உறவுமுறையைக் கருத்திற் கொண்டு அவரவரே செலவுத் தொகையை ஏற்றுக்கொள்ள வேண்டியது என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2024–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2024.04.01 17:43:31 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**<u>9. வாதிகள் தரப்பு சாட்சியங்கள்.</u>**

| **வ.எண்.** | **பெயர்** |
|---|---|
| வா.சா.1 | சவடப்பன் (எ) சவடமுத்து |

**<u>10. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்.</u>**

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | --- | கொடி வழி ஜாபிதா |
| வா.சா.ஆ.2 | 10.11.2016 | திண்டுக்கல் உதவி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு |
| வா.சா.ஆ.3 | 20.10.2019 | 1 முதல் 3 இலக்க சொத்திற்கான பட்டா |
| வா.சா.ஆ.4 | 20.10.2019 | 4 இலக்க சொத்திற்கான கூட்டுப்பட்டா |
| வா.சா.ஆ.5 | 01.08.2019 | நாகம்மாளின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.6 | 16.06.1993 | 1, 3 பிரதிவாதிகள் அவர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 25.06.1921 | தொடதிம்மையகவுடரின் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 21.07.2004 | தொடதிம்மையகவுடரின் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் |

**<u>11. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள்</u>**– இல்லை.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.04.01 17:43:23 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

OS.No.1026/2022
Sub Court,
Oddanchatram.
01.04.2024
Judgment(Fair/Draft)